<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No. 212 /2025</u>

<u>வழக்கு சாட்சி PW–17</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ்கண்ணன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஜெயசுப்பிரமணியம் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | இராமநாதபுரம் | வயது | : | 43 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Wednesday of 08.07.2026.

**(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காணொளி மூலம் ஆஜரானார்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் சிறப்பு நுண்ணறிவு பிரிவு தனிப்பிரிவு குற்ற புலனாய்வுத்துறையில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் சுரண்டை வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 06.09.2023ம் தேதி, காலை 08.00 மணிக்கு பாவூர்சத்திர காவல்நிலைய குற்ற எண்.306/2023 வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

அதே தேதி, காலை 09.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் கடற்கரை மற்றும் பாக்கியலட்சுமி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த வரைபடம் **அ.சா.ஆ.11** ஆகும். பின்னர் 10.15 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தில்

உடைந்த நிலையில் காணப்பட்ட டீவி, கண்ணாடித்துண்டுகள் கொஞ்சம் ஆகியவற்றை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். பின்னர், சாட்சிகள் மீனாட்சி, முருகேஸ்வரி, மாடத்தி, குமார், கடற்கரை, பாக்கியலட்சுமி, உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், அதே தேதியில் 13.15 மணியளவில் எங்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேலப்பாவூர், இந்திராநகரிலுள்ள ஒத்தபனையடியான் கோவில் தெருவில் வீட்டுபக்கம் நின்று கொண்டிருந்த எதிரி வசந்தகுமார் என்ற மயிலம்பாடி என்பவர் எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவை மடக்கி பிடித்து 13.45 மணிக்கு கைது செய்து, சாட்சிகள் சாமித்துரை மற்றும் இராஜமாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் விசாரிக்க எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் 14.15 மணிக்கு பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கிட்டு தோப்புல ஒளிஞ்சு கிடக்கிறதையும், ஈஸ்வர பாண்டியும், ராஜ்சுமின் ஒளிஞ்சு கிடக்கிறதையும் காட்டுகிறேன். அவர்களிடம் நாங்கள் இராத்திரி வைச்சுருந்த கத்தியும், பைக்கும் இருக்கு, கூட்டிக்கொண்டு போனால் அவங்க இருக்கிற இடத்தை அடையாளம் காட்டுவேன் என்று கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.12** ஆகும்.

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியையும், சாட்சிகளையும் உடன் அழைத்துக்கொண்டு அன்றைய தினம் 15.45 மணியளவில் கீழப்பாவூர் நரமசிம்மர் கோவில் அருகேயுள்ள தோப்பில் இருந்து 4ம் எதிரி கிட்டு என்ற ராஜேந்திரன் என்பவரை கைது செய்து, பின்னர் எதிரி சம்பவத்தின் போது பயன்படுத்திய TN–76–AC–4840 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் இருசக்கரவாகனத்தையும், மரப்பிடியுடன்

கூடிய கத்தி ஒன்றையும் அன்றைய தினம் 15.45 மணியளவில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.13** ஆகும்.

மயிலம்பாடி என்ற வசந்தகுமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி 16.00 மணிக்கு மேலப்பாவூர் வடக்கு தெரு சத்யராஜ் என்பவர் புதிதாக கட்டி வரும் வீட்டின் மாடியிலிருந்த இவ்வழக்கின் இளஞ்சிறார் ராஜ்சுமின் என்ற ராஜசுமனை அவரது அக்கா மதுபாலாவிற்கு வழக்கு சம்பந்தமாக தகவல் கூறி வரவழைத்து, இளஞ்சிறாரை கையகப்படுத்தினேன். இளஞ்சிறார் ராஜ்சுமன், ஈஸ்வரபாண்டி இருவரும் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்திகள் இரண்டையும் இளஞ்சிறார் ராஜ்சுமின் ஆஜர் செய்ததை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். (அந்த அத்தாட்சி வழக்கு கோப்பில் இல்லை.).

பின்னர், 18.15 மணிக்கு குலசேகரப்பட்டி குதிரை கோவில் தென்பக்கமுள்ள குளத்துக்கரை அருகே நின்று கொண்டிருந்த இளஞ்சிறார் ஈஸ்வரபாண்டி என்பவரை அவரது பெரியப்பா கருப்பசாமி வழக்கு சம்பந்தமாக தகவல் கூறி வரவழைத்து, இளஞ்சிறாரை கையகப்படுத்தினேன்.

பின்பு, எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை 18.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து, நிலைய பதிவேடுகளில் பதிவு செய்து, எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இளஞ்சிறார்கள் இருவரையும் பார்வையாளர்கள் இருக்கும் இடத்தில் அமர வைத்து திருநெல்வேலி இளஞ்சிறார் நீதிக்குழுமத்திற்கு அனுப்பி வைத்தேன்.

08.09.2023 ம் தேதி, வழக்கின் சம்பவத்தின் போது உடனிருந்த சாட்சிகளான மஜா வேல்முருகன், சாமித்துரை, ராஜமாணிக்கம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 09.09.2023 ம் தேதி, சாட்சிகள் முத்துலட்சுமி, முருகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 14.09.2023 ம் தேதி, காயம்பட்ட மீனாட்சி சிகிச்சை அளித்த தென்காசி அரசு தலைமை மருத்துவர்.மாரிமுத்து அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். பின்னர் 25.09.2023 ம் தேதி, வழக்கில் சேதமடைந்த டீ.வி மற்றும் உடைந்த கண்ணாடித்துண்டுகளுக்கு சேதமதிப்பீடு சான்று வழங்கிய ஜான்பீட்டர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, சேதமதிப்பு சான்று பெற்றேன். அந்த சேதமதிப்பு சான்று **அ.சா.ஆ.14** ஆகும். பின்னர் சாட்சிகள் கனிப்பாண்டியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.15** ஆகும். TN–76–AC–4840 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் இருசக்கரவாகனம் – அ.சா.பொ.1 ஆகும். மரப்பிடியுடன் கூடிய கத்தி (35 செமீ) ஒன்று – அ.சா.பொ.2 ஆகும். உடைந்த டீவி, கண்ணாடித்துண்டுகளுக்கான படிவம் 91 **அ.சா.ஆ.16** ஆகும். உடைந்த டீவி அ.சா.பொ.3 ஆகும். கண்ணாடித்துண்டு அ.சா.பொ.4 ஆகும். பின்னர், 12.10.2023 ம் தேதி நான் பணிமாறுதலாகி சென்று விட்டதினால், வழக்கு கோப்பினை நிலைய பொறுப்பில் ஒப்படைத்தேன்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும், எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

சாட்சி இராமநாதபுரம் முதன்மை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru.Manivannan, Assistant Programmar, முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.10 15:47:06 +0530